www.tamilarangam.net

அன்புடன்

1993/10/10

# படி 3

புரட்டாதி - 1993.

விலை ரூபா 10

வீ. ஆனந்தன்

சோலைக்கிளி

இனியவள்

வி. அபிமன்யு

நட்சத்திரன் செவ்விந்தியன்

மோசே

என். ஆத்மா

மகேஸ் சோமசுந்தரம்

சுந்தர்

ஆதித்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அபிப்பிராயங்கள்

● படி தரமாக உள்ளது, அதன் தரத்தை பேண முயற்சிக்கவும். மட்டக்களப்பில் அண்மைக் காலமாக அபரிதமான விழிப்புணர்வு தெரிகின்றது.

— அந்தனிஜீவா, கொழும்பு.

○ ஆக்கங்கள் எல்லாம் ஒரு தரத்தனவாக இல்லை. சோலைக்கிளியின் கவிதை, அருந்ததியின்ஓவியம் பற்றிய கட்டுரை என்பன சிறப்பாக இருந்தன.

— விஜயன், மாவத்தகம

● படியாம்; காந்திரமாம்... இது எத்தனை பேருக்கு விளங்கப் போகிறது?

— அன்புமணி, மட்டக்களப்பு.

○ மைபார்த்தல் போன்ற பகுதிகள் அவசியம்தானா?

— சிவா, கல்முனை.

● இன்னும் நன்றாக மை பாருங்கள்,

— கமால்தீன், பேருவளை.

○ மொழிபெயர்ப்பு முயற்சி பாராட்டத்தக்கது. தொடர்ந்தும் சிங்கள கலை இலக்கியங்களை பரவலாக அறிமுகப் படுத்த வேண்டும்.

— சுதன், கிண்ணியா

● மோசேயின் டயறி நன்றாகவே உள்ளது. ஒரு சில எழுத்துப் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம்.

— கே. ரீ. தவராஜா, நீர்கொழும்பு.

○ உங்கள் முகம் எனக்குத் தெரியாது. ஆனால் எனது 'முகங்கொள்' தொகுதிக்கு நீங்கள் எழுதிய குறிப்பு (தொலைதூர வெளிச்சங்கள்) உங்களை என்னருகே நெருங்கச் செய்துள்ளது.

— கே. பி. அரவிந்தன், பிரான்ஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலை

அலாரம் கேட்டு விழித்துக் கொண்டாலும், வழக்கம்போல் எழுந்திருக்க தோன்றவில்லை. உடம்பு முழுவதும் அடித்து முறித்தது போல் ஒரே அசதி. தலையில் கல்லைத் தூக்கி வைத்ததைப்போல பாரம். கொஞ்சக் காலமாகத்தான் இப்படி என்றாலும் கேட்டதும் குதித்தெழுவதுதான் பல வருசத்துப் பழக்கம். ஆனால் இன்று அவளுக்கு எழுந்திருக்கத் தோன்றவில்லை. எழுந்திருக்கவில்லை என்றால் என்ன பூமி சுழலாமலா நின்றுவிடும். அவள் போர்வைக்குள் சுருண்டு கிடந்தாள்.

அலாரம் நிறுத்தப்படாமல் தொடர்ந்து அடித்துக்கொண்டிருப்பதைக் கேட்டு பக்கத்தில் படுத்திருந்த கணவன் எழுந்து அலாரத்தை நிறுத்திவிட்டு மனைவியை உலுக்கிய வண்ணம் கேட்டான்.

''என்ன இன்றைக்கு இவ்வளவு நேரமாகியும் எழும்பல்ல''

''நீங்க எழும்புங்க''

அவள் திரும்பிப்படுத்தாள்.

கணவன் எழுந்து லைற்றைப் போட்டுவிட்டு அவளின் போர்வையை இழுத்தெறிந்தான்.

''எழும்பிப் போய்த் தேத்தண்ணி போடு''

முடியாது என்று சொல்லவில்லை.

அவளுடைய முகபாவம் கண்டு கணவன் அதிர்ச்சி அடைந்தான்.

அவன் உரத்த குரல்.

''உன்னிடம்தான் சொல்றேன் எழுந்துபோய் தேத்தண்ணிவை''

''ஏ மனிசா முடியாது என்று சொன்னது கேக்கல்லையா, நீங்கள் காலையிலே எனக்குக் கோபத்தை உண்டாக்காமல் போய்த் தேத் தண்ணியை வையுங்கள்''

அவளுடைய கண்களை நேருக்கு நேர் பார்க்க முடியாத அவன், அடுக்களைக்குப் போனான். அவளுக்கு அடக்கமுடியாத சந்தோசம். பதினைந்து வருசமாக இத்தத் துணிச்சலைக் காட்டாதிருந்ததை இட்டு துக்கப்பட்டாள். அவள் போர்வையால் போர்த்திக்கொண்டு மீண்டும் படுத்தாள். சுகமான ஒரு மயக்கம். காலையில் இவ்வாறு போர்வைக்குள் கிடந்து மயங்குவது ஒரு நல்ல சுகானுபவம்.

''தேத்தண்ணி''

கணவனுடைய சத்தம் கேட்டு அவள் எழுந்திருந்தாள்.

''அங்கே வையுங்கள்'' என்று அவள் சொன்னாள்.

தேத்தண்ணியை சைட் ரேபிளில் வைத்துவிட்டு கணவன் போனதை ஆச்சரியத்துடன் பார்த்த வண்ணம் குளியலறைக்குச் சென்றாள். பல் விளக்கி, முகம் கழுவிவந்து அவள் தேத்தண்ணியைக் குடித்தாள். தேத்தண்ணி பரவாயில்லை. சீனிதான் கொஞ்சம் கூட. காலையில் படுக்கையில் இருந்தபடியே தேத்தண்ணி குடித்த காலம் மறந்தே போய்விட்டது. கலியாணம் கட்டமுந்தி அம்மா தேத்தண்ணி போட்டு மேசையில் வைத்துவிட்டு தன்னை எழுப்புவது வழக்கம். தேத்தண்

மலையாள மூலம்:
பி. எம். சுகிற்

தமிழில்:
வீ. ஆனந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ணியைக் குடித்ததும் உற்சாகம் பிறந்தது: எழுந்து திண்ணைக்குப் போனாள். கணவன் முகத்தை 'உம்' என்று வைத்துக்கொண்டு சாய்மனைக் கதிரையில் படுத்தவண்ணம் பத்திரிகையை படித்துக் கொண்டிருந்தான். அதைக்கண்டதும் அவளுக்குக் கோபம் வந்தது; ''பேப்பரா வாசித்துக் கொண்டிருக்கீங்க, அடுக்களைக்குப் போக வில்லை. எட்டு மணிக்கு பிள்ளைகளின் ஸ்கூல் பஸ் வரும்''

அவன் உறுத்திப் பார்த்தான். ஆனால் அவள் அதைப் பொருட் படுத்தவில்லை. அவன் கையிலிருந்த பத்திரிகையை வாங்கிக்கெண்டு அவள் சொன்னாள்:

'புட்டு அவிக்க மா அலுமாரியில் இருக்கு: பழமும் இருக்கு, புட்டு மட்டும் அவிச்சால் போதும். பப்படம் வேணும் என்டாலும் பொரி யிங்க''

''எனக்கு புட்டவிக்கத் தெரியாது''

''ஓம்லட் செய்யத் தெரியுமா?''

'ம்''

''இன்றைக்குப் பாணும் ஓம்லட்டும் போதும், நாளையிலிருந்து புட்ட விக்க படியுங்க''

அவன் அப்போதும் அதிர்ச்சியுடன்தான் இருந்தான்.

''நீங்க கெதியாப்போய் பாணும் வாழைப்பழமும் வாங்கிற்று வாங்க' அவன் வீட்டிற்குள் போய் சேட்டைப் போட்டுக்கொண்டு கூடையும் கையுமாக கடைக்குப் போவதைக் கண்டபோது, அவள் அடக்க முடியாத சந்தோசத்தால் சிரித்தாள். அவன் ஏதோ சந்தேகத்தோடு திரும்பி திரும்பிப் பார்த்துப் போனான். அவன் திரும்பி வரும்போது அவள் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் கழிந்ததும் அவளுக்கு குளிக்கவேணும் போல் தோன் றியது: காலைக் குளிப்பில் ஒரு பிரத்தியேக சுகமுண்டு. கல்லூரியில் படிக்கும் காலத்தில் காலையில் தேத்தண்ணி குடித்து முடிந்ததும் குளித்துவிட்டுத்தான் படிப்பது: இப்போது வீட்டு வேலை எல்லாம் முடித்துவிட்டு குளிக்கப்போக ஒன்னரை மணியாகும். அவள் ஒரு பாட்டை முணு முணுத்துக்கொண்டு அறைக்குள் போன போது கணவன் டெலிபோனுக்கு அருகில் இருக்கும் கதிரையில் இருந்து கொண்டு, ரெலிபோன் டிரக்டறியில் நம்பர் தேடிக்கொண்டிருந்தார்: இப்பொழுதுள்ள டெலிபோன் டிரக்டறியில் தேவையான நம்பரைத் தேடிப்பிடிப்பது என்பது பெரும் பிரயத்தனமான காரியம்.

''இன்னும் அடுக்களைக்குப் போகவில்லையா? பிள்ளைகளுக்கு தேத் தண்ணி கொடுத்ததா? டெலிபோன் பேச்சையெல்லாம் பிறகு வைத் துக்கொள்ளலாம் நான் குளிச்சிற்று வாரன்'' என்றாலும் அவ்விடத்தை விட்டு அசையாமல் நின்ற கணவனை நிர்ப்பந்தித்து அடுக்களைக்கு அனுப்பினாள். யாருடனாவது டெலிபோனில் கதைக்கலாம் என எண்ணினாள்: ஆனால் தனக்கு ஒரு தோழியும் இல்லை. அம்மாவு டன் கதைக்கலாம் என்றால் அவளுக்கு சரியாகக் காது கேட்காது. அவள் பாட்டொன்றை முணுமுணுத்த வண்ணம் குளியலறைக்குள்

வீ. ஆனந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்றாள்; கீஸரை ஓன் செய்தாள்; கணவரின் கிரீமை எடுத்து உடம்பு முழுவதும் பூசினாள். தலையில் காய்ச்சிய எண்ணெயைத் தோய்த்தாள். கொஞ்ச நேரம் உடற்பயிற்சி செய்தாள். தண்ணீர் சூடாகியது. குளிக்கத் தொடங்கினாள். தலையில் 'ஷம்பூ' தேய்த்து கழுவினாள்.

குளித்து முடிந்து உடம்பு முழுவதும் பௌடர் போட்டாள். சாரியும் பிளவுசும் மாற்றி தலை முடியையும் அழகாகச் சீவி முடித்தாள். கண்ணாடியில் பார்த்த போது முப்பத்தைந்து வயது என்று சொல்ல முடியாது. கண்ணுக்கு மையிட்டு பொட்டும் வைத்த போது அவளுக்கு ஒரு திருப்தி உண்டாகியது. எல்லா அலங்காரங்களையும் முடித்துக் கொண்டு கண்ணாடியில் பார்த்தபோது அவளுக்கு ஒரு பாட்டுப் பாடவேண்டும் போலிருந்தது. படிக்கும் காலத்தில் அழகாகப் பாடுவாள். இப்போது அவள் சாரிரம் பரவாயில்லை. கொஞ்சம் உரத்த சத்தத்தில் பாடிக்கொண்டு கதவைத் திறந்த போதுதான் கதவுவெளிப் பக்கத்தில் பூட்டப்பட்டிருந்தது தெரிந்தது. யார் வெளிப்பக்கத்திலிருந்து பூட்டியது? அவர் ஏன் என்னை அறைக்குள் வைத்துக் கதவைப் பூட்டினார். அவள் கதவிடுக்கினுள் காதை வைத்துக் கேட்டாள். கணவன் யாரையோ டெலிபோனில் அழைத்துக் கொண்டிருந்தான். அது அவனுடைய நண்பரான சைக்கியாற் றிஸ்ட். ஹலோ மூர்த்தியா நான் ராகுலன் பேசிறன். நீ கொஞ்சம் உடனே வரவேணும். என்னென்டு தொரியா என்ட மனைவிக்கு காலையில் இருந்து அவ்வளவு சரியில்லை. ஒருநாளும் இல்லாத மாதிரி நடந்து கொள்கிறாள்; கலியாணம் கட்டி பதினைந்து வருஷம் என்னை எதிர்த்து ஒரு வார்த்தை பேசி இருக்க மாட்டாள். இன்றைக்கு அவள் செய்யிறதெல்லாம் நேர்மாறு. முடியுமென்றால் நேர்ஸ்மாரையும் கூட்டிட்டு வா. பலம் பிரயோகிக்க வேண்டி வந்தாலும் வரும். இப்பவே அங்கு அட்மிட் பண்ணணும். தாமதிக்காத. ஓமோம் பூட்டித்தான் வைச்சிருக்கன்; எனக்கு பயமாகத்தான் இருக்கு. சரி உடனே வா. வைக்கிறன்.

பிறகு அவளுக்கு ஒன்றும் கேட்கவில்லை. அவள் தனது பலம் கொண்ட மட்டும் தட்டினாள். கதவைத் திறங்கள் எனக்கொன்றுமில்லை...... நான்..... நான்...சும்மா பகிடிக்கு... திறவுங்கள் எனக்கு அடுக்களையில் வேலை இருக்கு.. திறங்கள் ... திறங்கள்...

வீ. ஆனந்தன்


| | | |
|---|---|---|
| படி | ஆசிரியர் குழு | முகவரி: |
| படி | வெ. தவராஜா | 22 |
| படி | கே. லோறன்ஸ் | செபத்தியார் வீதி |
| படி | | மட்டக்களப்பு |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாம்பு பாம்பு பாம்பு

பாம்பு பாம்பு பாம்பு.
கண்ணுக்குள் ஒன்று.
காதுக்குள் ஆறேழு.
மூக்குக்குள் இரண்டு.
பிடரியில் நாலைந்து,
பாம்பு.
பாம்பு.
பாம்பு.

தெருவில்;
குதிவரைக்கும் எரிந்த
அரை உயிருப் பிணத்தை
கண்டு விட்டு வந்தேன்,
பாம்பு.
பாம்பு.
பாம்பு.

தோளில் ஒரு பாம்பு
என் தொடையில் எட்டு
தொப்புளுக்குள் மூன்று
குதியில் விஷ நாகம்
ஒருபாம்பு இழுத்துப் போய்
என் ஈரலைத்தான் புசிக்கிறது
இன்னொன்று கண்ணை
முட்டைபோல் குடிக்கிறது
நெஞ்சைப் பிளக்கிறது ஒரு பாம்பு வெறியோடு
இதயத்தைச் சப்பி ருசிக்கிறது இன்னொன்று
பாம்பு
பாம்பு
பாம்பு

என் கட்டிலெல்லாம் பாம்பு
அறையெல்லாம் அரவங்கள்
நித்திரையில் வருகின்ற அவள் கனவைக் கூட
ஒரு பாம்பு கொத்தி
அவள் முடியைத் தின்கிறது.
காற்றில் பல பாம்பு
வாசலிலே விரிந்திருக்கும்
பூவுக்குள் கண்கொத்தி
பாம்பு.
பாம்பு.
பாம்பு.

சோலைக்கிளி

20-02-1992



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தனித்திருத்தல்

எனக்கு
எல்லாமே நானாக
இருந்து முடித்தலே
இனி என்
வாழ்வாக அமையட்டும்

என்னை துரத்தும்
நினைவுகளே
ஓடு—ஓடு—
என்னைப் பிரிந்து
மீண்டும் திரும்பா
எல்லைக்குள்

எனக்கு தேவை
இனி,
அலைகளை விழுங்கிய
கடலின் அமைதி
திசைகளை தொலைத்த
சமவெளியில் இருக்கை
முகத்தினை மறைக்கும்
இருட்டில் ஒரு வாழ்வு!

09–06–1993.

இனியவள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் உலகமெல்லாம் வியாபாரிகள்

குறிப்பிடத்தக்க ஈழத்துப் பெண் எழுத்தாளர் மிகச் சிலரே; அவர்களுள் முதலிடம் பெறுபவர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம, அக்கரைப்பற்றினைச் சேர்ந்த கோளாவிலில் பிறந்தவர் கடந்த இரு பதாண்டுகளாக இலண்டன் வாசி, (சிறந்த நாவல்களுள் ஒன்றான) 'ஒரு கோடைவிடுமுறை'' 'தில்லையாற்றங்கரையில்' என்கிற இரு நாவல்களின் பின் மூன்றாவது நாவல் 'உலகமெல்லாம் வியாபாரிகள்'

தமிழ்நாவல் வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்கும் போது, ஐரோப்பிய நகரொன்றில் – இலண்டன் மாநகரில் – வாழ்கின்ற தமிழர்களது வாழ்க்கையினைச் சித்திரிக்கும் முதல் நாவலென்ற சிறப்பு இதற்குண்டு. பல்வேறு பிரச்சினைகளைக் கோலங்களாகவும் கோடுகளாகவும், காட்ட முற்படுகின்றது இந்நாவல்.

ஒரு நோக்கில் இது இலண்டன் வாழ் தமிழர் பற்றிய அரசியல் நாவல் எழுபதுகளில் இங்கு வாழ்ந்தோர் இருவேறு அரசியல் போக்குடையவர். இளைஞர்கள், ஏலவே இருந்துவந்த தமிழ்த் தலைமைகளில் அதிருப்தி கொண்டவர்கள். புதிய தலைமைகளைத் தேடுபவர்கள். இத்தகையோரைப் பிரதிநிதிப்படுத்துபவன் கார்த்திகேயன், நடுத்தர வயதினர் அல்லது முதியவர்கள் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்தவர்கள்: (இவர்களுள் பலர் பொழுது போக்காளர்)இத்தகையோரைப் பிரதிநிதிப்படுத்துபவர் பேரின்ப நாயகத்தார். இவர்களது வியாபாரநோக்கும் இளைஞர்களின் இலட்சிய நோக்கும் சந்தித்துக் கொள்கின்றன நாவலில்.

இன்னொரு நிலையில், இது தமிழ்ப் பெண்களின் விடுதலை பற்றிய நாவல். சகுந்தலா, மீனா, உஷா, சில்வியா (மேலைத்தேயப் பெண்) ஆகியோர் பெண் விடுதலையினை வெவ்வேறு அளவில் வெளிப்படுத்துகின்றனர். உஷா உடன் விவாகரத்துப்பெறும் துணிவினள். மீனா தான் விரும்பும் ஆங்கிலேய இளைஞனுடன் செல்லும் துணிவுடையவள், (உஷா போன்ற துணிவில்லா விடினும்)சில்வியா உயிர் காதலனை துறந்து செல்பவள். தன் விருப்பிற்கு மாறாக மணந்து கொண்டவனை எதிர்த்துக் குரலெழுப்ப, பல வருடங்களாகின்றன சகுந்தலாவுக்கு பெண் விடுதலை பற்றிப் பேசும் 'வீடு' செயற்கைப் பாங்குடன் அமைய, 'காதலெனும் ஏணியிலே' மனோரதியப் பாங்குடன் விளங்க, இந்நாவல் அவ்வாறமையவில்லை. பெண் விடுதலை பற்றிப் பேச மேலைத்தேயச் சூழல் பொருத்தம்போலும்.

# தொலைதூர வெளிச்சங்கள்

○ வி. அபிமன்யு

பிறிதொரு கோணத்தில் இந்நாவல் உலகமெங்கும் சிதறுண்டு வாழும் தமிழர்களது - உயர்குடித் தமிழர்களது – பண்பாட்டின் அடித்தளம் பற்றி அலச முற்படுகின்றது. கார்த்திகேயன் குறிப்பிடுகின்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் உலகமெல்லாம் வியாபாரிகள்**

''கல்யாணம் என்பது என்னைப் பொறுத்தவரையில் இரண்டு மனிதப் பிறப்புகளுக்கிடையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி. அது சமயச் சார்பிலோ அல்லது வேறு எந்தப் பொருளாதார முறையிலோ அமைவது வெறும் வியாபாரம். உன் தந்தை போன்றவர்களுக்கு வாழ்க்கையில் எல்லாமே வியாபாரம். தனிப்பட்ட வாழ்க்கையிலோ அரசியலைப் பொறுத்தவரையிலோ எதிலும் லாப நட்டத்தின் அடிப்படையில் தான் இவர்களால் யோசிக்க முடியும்''

அலசலின் முடிவு (தமிழர்) உலகமெல்லாம் வியாபாரிகள் என்பது. இதனை உயிர்த்துவாக வெளிப்படுத்தும் பேரின்பநாயகம், சிவதாசன் ஆகிய இருபாத்திரங்களும் தமிழ் நாவல் உலகில் மறையாத பாத்திர வார்ப்புகள்.

வேறொரு ரீதியில் இந்நாவல் காதல்நாவல்; சுவையானதொரு காதல் நாவல். குறிஞ்சி மலர் அரவிந்தன், பூரணி போன்று கார்த்திகேயன், சகுந்தலா விண்ணுலகில் திரிந்தவர்களல்லர், மண்ணுலக வாசிகள். ஆக, இந்நாவல் அரசியல், பண்பாடு பெண்ணியம், பொருளியல் யாவும் கலந்ததொரு நாவலாகியுள்ளது: அகிலன் போன்று மனோரதியப் பாங்காகவில்லை. செ. கணேசலிங்கன் போன்று திட்டமிட்டோ செயற்கைப் பாங்கிலோ வெளிப்படவில்லை. கலைத்துவமும், யதார்த்தமும் குழைந்த நாவலாகியுள்ளது. இது

நாவலின் தலைப்பு – உலகமெல்லாம் வியாபாரிகள் - அர்த்த புஷ்டியுடையது; சிந்தனையில் வெவ்வேறு பரிமாணங்களை எழுப்புவது.

சுருங்கக் கூறின் இலண்டன் வாழ் தமிழரது வாழ்க்கையின் சிலபல கோலங்களையும் அலங்கோலங்களையும்; கோணங்களையும் கோணல்களையும் அறிய முற்படுவோர் அவசியம் வாசிக்க வேண்டியது இந் நாவல்.

O வி. அபிமன்யு

**படைப்பாளிகளுக்கு!**

'படி' தங்களிடம் இருந்து படைப்புக்களை எதிர்பார்க்கிறது.

'படி' யின் தொடர்ச்சியான வரவுக்கு ஒத்துழையுங்கள்.

தங்களின் தரமான படைப்புக்கள் பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அங்கலாய்த்தல்**

ஒரு மாரிப்பனிக்கால
விடியலில் நான் எழும்புகிறேன்
அப்படியொரு யாழ்ப்பாணத்து இரவு நினைவு
முருங்கை மர இலைகள்
புல் நுனிகளில் பனித்துளி
முத்தத்தில் புல்லில் இரைச்சல் சத்தம் வரச்சலமடித்தேன்.

ச்சா! ச்சா! ச்சா!
அது என்ன காலமப்பா
வீடு முழுக்க பூவரச மரம் நிற்கிறது
எங்கள் வீட்டு பின் பக்கத்து குளம்
இப்போது அது ஒரு நதி.
செத்துப்போன அப்பா, வெளிநாட்டிலிருக்கிற மாமா
எல்லாரும் நதியில் ஒருக்கால் படகோட்டி
வந்து இறங்குகிறார்கள்.
படகு கூட ஒரு பூவரசில் கட்டி வருகிறார்கள்
தங்களுக்குள் கனக்க கதைத்து
கள்ளுக் குடிக்கிறார்கள்.

பறந்துவிட்ட வசந்த காலங்கள்
நிலா முன்றலில் முகம் கழுவி
வீதியால் போன சைக்கிளையும் மனிதனையும் ரசித்து
பனங்காய் விழுகிற சத்தம் கேட்டு
நாங்கள் படுக்கைக்குப் போனோம்.
அது அப்ப.

நட்சத்திரன்
செவ்விந்தியன்

*02 - 02 - 1993*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பிரியாவிடை

உலகப் பிரசித்திபெற்ற பதிப்பகமான 'பென்குயின் இந்தியா' வெளியிட்ட **Noon in Calcutta – Short Stories From Bengali** – என்ற சிறுகதைத் தொகுதியிலிருந்து ''படி'' வாசகர்களுக்காக சுரேஸ் பாசுவின் **FARE WELL** என்ற சிறுகதை:

இந்து – முஸ்லீம் கலவரம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். செக்ஸன் 144வது சட்டத்திற்கமைய ஊரடங்குச் சட்டம். இருளின் மறைவில் குழந்தைகள் கொல்லப்படுகிறார்கள். இறந்து கொண்டிருக்கும் பெண்களதும் பிள்ளைகளதும் கூக்குரல்கள். சட்டரீதியான அமைதியை நிலை நாட்டும் முகமாக படைவீரர்கள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹு அக்பர் என்ற கோசமும் வந்தேமாதரம் என்ற கோசமும் கேட்டுக்கொண்டிருக்கிறது இரண்டு வீதிகள் சந்திக்கும் ஒரு சந்தியில் இரண்டுபேர் பயத்துடன் பதுங்கி இருக்கிறார்கள். ஒருவன் மற்றவனிடம் கேட்டான் ''நீ இந்துவோ முஸ்லீமோ. நீ முதலில் கூறு என்றான் மற்றவன் ஒருவன் தோணி ஒட்டுபவன். மற்றவன் பஞ்சு மில்த் தொழிலாளி. யாரோ வருகிறார்கள். இவ்விடத்தை விட்டுப் போவோமா'' என்றான் ஒருவன். ஏன் சாவதற்கா என்றான் மற்றவன். ஒருவருக்கு ஒருவர் மீது சந்தேகம் ''பீடி குடிக்கிறாயா'' என்று ஒரு பீடி கொடுத்தான் பஞ்சு மில்த் தொழிலாளி. அதைவாங்கிக் கொளுத்திக் கொண்டே அல்லாவிற்கு நன்றி என்றான் தோணிக்காரன் அதைக் கேட்டதும் மில்த் தொழிலாளி பதற்றத்துடன் அப்போ நீ ஒரு...... ஆம் நான் ஒரு முஸ்லீம். அதனால் என்ன?

''ஒன்றுமில்லை'' என்றான் மில்த் தொழிலாளி. தோணிக்காரனிடம் ஒரு பொதி இருந்தது. அது என்ன என்று கேட்டான் மில்த் தொழிலாளி, 'என்ட குழந்தைகளுக்கு உடுப்பும், சாரியும் என்று பதிலளித்தான் தோணிக்காரன். இப்படி பேசிப் பேசியே நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டார்கள். ஏன் இந்த இனக்கலவரம்? அந்த இரண்டு பேருக்குமே ஏன் என்று தெரியவில்லை.

சப்பாத்துச் சத்தம் – அது அவர்களை நெருங்கிவந்து கொண்டிருந்தது அவர்கள் தப்பித்துக் கொள்ள முயன்றார்கள். தோணிக்காரன் மில்த் தொழிலாளியை ஒரு வெற்றிலை பாக்குக்கடைக்குப் பின் புறத்தில் கொண்டு விட்டு விட்டுச் சொன்னான் 'நீ இங்கே இருந்துகொள். இது இந்துக்களுடைய பகுதி'. முஸ்லீமான தோணிக்காரன் முஸ்லீம்கள் வாழும் பகுதிக்குப் போயாக வேண்டும். அது மட்டுமல்ல. அடுத்த

## மோசேயின் டயறி.

மோசே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாள் ஹஜ்ஜுப் பெருநாள். அவன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து எட்டு நாட்கள். இந்து பயத்துடன் கேட்டான் ''நீ எப்படிப் போவாய். உன்னை அவர்கள் பிடித்து விட்டால்''. நான் பிடிபடமாட்டேன். நீ இங்கேயே இரு நான் போகிறேன், இந்த இரவை மறக்க மாட்டேன். விதி இருந்தால் மீண்டும் சந்திப்போம்'' என்று சொல்லி விட்டு முஸ்லீம் போனான். அவனது மனைவி அன்பாலும், ஆறுதலாலும் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கண்ணீர் சிந்தும் காட்சியும் குழந்தைகளின் குதுகலமும் மில்த் தொழிலாளியின் மனத்திரையில் விரிந்தது. சப்பாத்துப் போட்டவர்கள் ஓடுகிறார்கள். இரண்டு வெடிச் சத்தம். போனவனின் மரணஓலம். மில்த்தொழிலாளியின் கற்பனையில் மனைவிக்கு வாங்கிய சாரியையும், குழந்தைகளுக்கு வாங்கிய உடுப்புகளையும் நெஞ்சோடு இறுக்கிக் கட்டிக் கொணடு அந்த நண்பன் கிடக்கிறான். அவைகள் அவனின் இரத்தம் தோய்ந்து சிகப்பாகிக் கொண்டிருக்கிறது. அப்போது தோணிக்காரனின் சத்தம் அவனுக்குக் கேட்டது. ''சகோதரா எனக்கு அவர்களிடம் செல்ல முடியவில்லை. பெருநாள் நாளிலே எனது பிரியத்திற்குரியவர்கள் கண்ணீரில் மூழ்குவார்கள். பகைவன் என்னை சரியான நேரத்தில் சந்தித்து விட்டான்''.

**ஹை, ஹை, ஹைக்கு**

ஹைகூ, ஹைகு, ஹைய்கு எனப் பலவாறு அழைக்கப்படும் ஹைக்கு ஜப்பானிய கவிதைத்துறையில் ஒரு சிறிய வடிவம். இது 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வளர்ச்சி பெற்றது. மூன்று அடிகளாலான இக்கவிதை இரண்டு அலகுகளைக் கொண்டது. முதல் இரண்டு அடிகளும் ஒரு அலகு. மூன்றாம் அடி ஒரு அலகு. முதல் இரண்டு அடிகளும் ஒரு ஒரு வினாவை – ஒரு வியப்பை ஏற்படுத்த மூன்றாம் அடி அதற்குரிய விடையைச் சொல்லும். ஹைக்குவை விடையோடு கூடிய விடுகதை எனச் சொல்லலாம். ஹைக்குவைப்பற்றி 'ஜப்பானியக் கவிதை'' என்ற தலைப்பில் பாரதியார் 1916ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ம் திகதிய சுதேச மித்திரனில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். ஹைக்கு அண்மையில் தமிழுக்கு வந்த செய்யுள் வடிவம். ஹைக்கு முதலடி 5 அசையும் இரண்டாவது அடி 7 அசையும் மூன்றாவது அடி 5 அசையுமாக 17 அசைகளைக் கொண்டது. ஹைக்குவின் அசைகள் உயிரொலியையே மையமாகக் கொண்டிருப்பாதால் தமிழில் ஹைக்கு எழுதுபவர்கள் ஒரு அசையாக நேரசையையே கொள்ள வேண்டும். நிரையசையை இரண்டு அசையாக அலகிட வேண்டும். இதோ இரண்டு ஹைக்குகள்.

ஜப்பானிய ஹைக்கு:

கிளைக்குத் திரும்பும்
உதிர்ந்த மலரா
பட்டுப் பூச்சி – மோரிடேக்

இந்திய ஹைக்கு:

வானமும் ஏழையா.
ஏனிந்தப் பிச்சைப் பாத்திரம்
நிரம்பாதிருக்கும் பிறை – அமுதபாரதி

மோசே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சகாப்தத்தின் சரிவு

சென்ற ஏப்பிரல் மாதம் 22 ம் திகதியுடன் சத்யஜித்ராய் இறந்து ஒரு வருடமாகியது. பிரம்மசமாஜ இயக்கத்தைச் சேர்ந்த சுகுமார் ராய்க்கும் சுப்பிரவாவிற்கும் ஏக புதல்வனாக 1921 ம் ஆண்டு மே மாதம் 2 ம் திகதி சத்யஜித்ராய் பிறந்தார். ரவீந்திரநாத் தாகூரின் மேற்பார்வையிலேயே சாந்திநிகேதனில் கல்வி பயின்றார். பதேர் பாஞ்சாலி (1955) முதல் சாகபரோஷகா (1990) வரை 31 படங்களை இயக்கினார். ஒஸ்கார் பரிசு உட்பட 25 பரிசுகளும் பட்டங்களும் பெற்றார். 76 நாள்கள் நோயுடன் நீண்ட போராட்டம் நடத்தி, 1992ம் ஆண்டு ஏப்பிரல் 22 ம் திகதி 4-45க்கு மரணமானார். மரண வீட்டில் கீதாஸென், மாதவிமுகர்ஜி, சுனீல் கங்கேகோபாத்தியாய, புத்ததேவ் தாஸ், சௌமித்ரசட்டர்ஜி, மம்தா சங்கர், அபர்ணாசென், ஆனந் சங்கர் ஆகிய திரை உலக மேதைகளோடு ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கண்ணீரும், கம்பலையுமாகக் கூடி இருந்த நேரத்தில் நீர் நிறைந்த கண்களோடு இந்தியாவின் புகழ் பெற்ற இன்னொரு இயக்குனரான மிருணாள் சென். இவருடைய வாழ்வு எவ்வளவு மகத்தானது. இவர் மரணத்தோடு நடத்திய போராட்டம் எவ்வளவு தீரமானது என்று சொன்னார். முழந்தாள் இட்டு பூமியில் தவழ்ந்தபடி இந்தியாவின் யதார்த்தத்திற்குள் – வாழ்வின் மெய்மைக்குள் மிக ஆழமாக பயணமாகும் அனுபவத்தை தனது படங்களின் மூலம் ரசிகர்களுக்குத் தந்த சத்ய ஜித்ராயின் மரணம் ஒரு சகாப்தத்தின் சரிவு.

## கன்னடத்துத் தங்கம்

நாட்டுப் பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதிலும் அறிமுகம் செய்வதிலும். ஆய்வு செய்வதிலும் தமிழர்கள் மத்தியில் இன்று ஆர்வம் பிறந்துள்ளது. ஆனால்கன்னடத்தோடு ஒப்பிடும் போது நாம் இந்தப் பணியில் பின் தங்கியே உள்ளோம் நாட்டுப்புற இயலுக்கு கன்னட அரசு தனி அக்கடமி அமைத்திருக்கிறது. கர்நாடக பல்கலைக்கழகம் ஆயிரக்கணக்கான நாட்டுப் பாடல்களைத் தொகுத்து புத்தகங்களாக வெளியிட்டுள்ளது. கன்னடத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நாட்டுப்பாடல் தொகுதியாவது இருக்கும். கன்னடத்தில் முதல் நாட்டுப்பாடல் தொகுதி 1802ம் ஆண்டு ஜோன் லெய்டன் என்ற ஸ்கொத்தலாந்துக் காரரால் தொகுக்கப்பட்டது. அதன் பின் அப்பணியில் ஹட்ஸன் ஸ்டிவன்ஸன், லைல் போன்ற கிருஸ்த்தவ பாதிரிமார்கள் ஈடுபட்டார்கள். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே பி. எம். சிறிகண்டையா, மாஸ்தி வெங்கடேஸ் அய்யங்கார். தாராபெந்தரே. கோரூர் ராமசாமி அய்யங்கார் போன்ற கன்னட இலக்கியகர்த்தாக்கள். நாட்டுப்பாடல்களைத் தொகுப்பதில் ஆர்வம் காட்டி வந்துள்ளார்கள் வங்காளமொழிக்கு அடுத்ததாக மிக அதிகமான நாட்டுப்பாடல்களைக் கொண்டமொழி கன்னடம் தான் என்று சொல்லப்படுகிறது. உதாரணத்திற்கு ஒரு பிரபலமான கன்னட நாட்டுப்பாடல்.

ஆலுக்கே ஹாலில்லா
சாலக்கே கொனேயில்லா
ஜாலிய மரவு நெரலில்லா
ஹெண்ணிக்கே
தாயிய மனய ஸ்திரவில்லா?

மோசே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆலைக்கு பூவில்லை. கடனுக்கு முடிவில்லை; ஜாலியமரத்திற்கு நிழல் இல்லை. பெண்ணுக்கு தாயின் வீடு ஸ்தரமில்லை.என் பது இந்த நாட்டுப்பாடலின் அர்த்தம் ஜாலிமரம் என்பது கன்னடத்தில் காணப்படு. ஒருவகை முள்மரம்.

எப்படி
வரைந்தனரோ

''தன் நாட்டு மந்திரியைத் தெரியாதவர்களுக்குக்கூட பிக்காஸோவைத் தெரியும். புத்தரை விடவும் கன்னி மேரியை விடவும் பிக்காஸோ புகழ் பெற்றவர்.'' உலகப்புகழ் பெற்ற ஓவியர் பிக்காஸோவைப்பற்றி பிரபல ஓவிய விமர்சகர் ஜோர்ச்பெஸ்ஸன் கூறினார். பிக்காஸோ குழந்தையாக இருந்தபோது உச்சரித்த முதல் வார்த்தை பிஸ் என்ற வார்த்தையாகும்.இது லாபிஸ் என்ற வார்த்தையின் மழலைச் சொல்லாகும். லாபிஸ் என்ற ஸ்பானியச் சொல்லின் அர்த்தம் பென்சிலாகும். இது போல பலகதைகள் பிக்காஸோவைப்பற்றி உண்டு. பிக்காஸோ தனது சிருஷ்டி இரகசியத்தைப்பற்றி இப்படிக் கூறுகிறார். ''என் ஓவியங்கள் அடுத்தவரை எதிர் நோக்கும் செயல். இன்னொருவர் என் மீது ஏற்படுத்தும் நிர்ப்பந்தங்களை நான் கான்வாஸில் பதிக்கிறேன். படத்தை ஆரம்பிக்கு முன் என்னென்ன வர்ணங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றோ, என் ஓவியம் எப்படி அமைய வேண்டும் என்றோ எனக்குத் தெரியாது.ஒவ்வொரு ஓவியத்திற்காக நான் அமரும் போதும் ஏதோ ஒரு படத்தைப் போடப்போகிறோம் என்ற உணர்வே எனக்கு இருக்கும் ஏதோ ஒரு வெளியில் என்னைத் தூக்கி எறிந்த உணர்வே என் உணர்வு''

புதுக்கவிதையில்
புதுப்
பிரார்த்தனை

கர்த்தாவே
மத்தாயு கள்ளும் குடிக்கும்
பெண்ணும் பிடிக்கும்
கர்த்தர் இரட்சிக்கணும்
இரட்சிக்க இல்லேங்கில்
மத்தாயிக்கு மயிராணு.

மோசே

நன்றி!

ஒரு இலக்கிய சஞ்சிகை வெளிவருவதிலுள்ள நிதி நெருக்கடிகளைப் புரிந்து கொண்டு தாமே முன் வந்து உதவி வழங்கிய அன்பர்க்கு நன்றி!

க. சுந்தரலிங்கம் — சவூதி — 1000 ரூபா

பெயர் தராத அன்பர் — இலண்டன் — 50£ பவுண்

நன்றி!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அவளைப் பற்றிய கோடை மழைக் கவிதை

மூன்று நாளாய் வானம்
சாடையான மூசாப்பு பின்னேரங்களில்

புழுதி அடங்கவும்
வெக்கை குறையவும்
பெய்யாதோ மாரியென அவாவ நான்,
தொடங்கிற்றே மத்தியானம் சராலெனத் தலையினிலோர்
நீர்க் குண்டை விழுத்தி.

---

எதில் கொழுவிப் பீய்த்தலாகினவோ? இம்
முகிற் பைகள்
கொட்டுகின்றனதான் விடாமல்
இரவு
எட்டு மணியான பிறகும்

நிலா முளைத்திருக்கவில்லை.
வெள்ளிகளாச்சும் பூத்தனவோ என்னவோ ?
வெளியில் கும்மிருட்டு இப்போ.
குப்பி விளக்கு குருடு பற்றும் அறையின்
உட்சுவரில் சாய்ந்திருக்கும் எனை,
ஜன்னல் கம்பிகளைக் குளிர்த்தி வரும் ஈரக் காற்று
உசுப்புது.

இக்கூதலில்
இழுத்துப் போர்த்திப் படுத்தல் போல் சுகம்
வேறெதுவும் அல்லவே.
எனினும், அவ்விதம் இயலாதின்று
ஆமை ஊர்வதால் கடகடக்கும்
தார் பீப்பாத் தகட்டு
பின் வேலிப் பக்கம்
நேற்று அவள் வந்ததும்
கை கால்கள் உதற உதற நான்
ஒன்றுக்கும் ஆகாத ஓரிரு
வார்த்தைகளை உதிர்த்தியதும், வேண்டுமென்றே
பொய்யாய்க் கோபித்து
குழற வைத்துப்
பின் சிரித்து விடை பெற்று வந்ததும், அதுவரை
படு வேகமாய் இதயம்
துடித்துக் கொண்டதால் இளைத்து
மூச்சிரைக்கப் போய் வீட்டுக் கதவில் சரிந்ததும்

— என். ஆத்மா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அவளைப் பற்றிய கோடை மழைக் கவிதை

கொச்சிப் பழச் சிவப்பு அவள்,
தடித்த இதழ்ச் சதைக் கட்டிகள்
பொன்னி வண்டுகள் மினுங்குகின்ற
அவ்விரு விழிகள்
இருப்புக் கொள்ளாமல்
குட்டி போட்ட பூனையாய் நான்,
அப்பொழுதின் பின்

முன் கதவிடுக்கினூடாக
தெம்பிலி மரத்தின் ஊசி இலைகள்.
மழைத் துளி பட்டு அசைவது தெரியுது
வாசற்றில் நிற்கிற
கறுத்தக் கொழும்பான் மாமரத்தில்
கொள்ளை இலைகள்
இலைக்கொரு பூவும் பிஞ்சுகளும்
எல்லாம் உதிர்ந்து கிடக்கும் காலையில்.

சற்றே இம் மழை ஓயுமெனின்
சில்லூறுச் சத்தம்
அல்லது தவளை கத்துவது கேட்கும்.
நீர் ஓடிப் போன சுழிகளில்
மணல் தூர்ந்திருக்கும்.
சோவெனவும். உர்ரெனவும் இம்மழை.

நூர்ந்திற்று விளக்கு.
இருக்குது முழங்குது வானம்,
உடைந்து துண்டு துண்டாய் விழுமோ ?
இரு மின்னல் கீற்றுக்கள்,
வெட்டி மறைந்தன தொடராய்.
அக் கண நேர வெளிச்சத்தில் விறாந்தையின்
சதுரக் கம்பிகளுக்கு அப்பால்
எதிர் வீட்டுப் பீலியால் நீர் வழிவது
தெரிந்திற்று.

அச் சிறு துளி
ஒளியின் பின் எனைச் சூழவும் முற்றாய்
நிரம்பியிருக்கிற கருப்பு வெளியினிலே
புலப்படுமொரு புள்ளி வட்டமாய்
அவள் முகம் மட்டும்.

என் . ஆத்மா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சினிமா நெறியாளர் பிரேமரத்தினாவுடன் பேட்டி

**கேள்வி:** நீங்கள் சினிமாவைப் பாவிப்பது என்ன நோக்கத்திற்காக?

**பதில்:** சினிமா சக்திவாய்ந்த பொதுசன தொடர்பு ஊடகம். இரண்டாவதாக பொழுதுபோக்கு சாதனம். இன்று சினிமாக் கலைஞர்கள் மக்களுக்குநெருக்கமான அனுபவங்களை திரைப் படங்கள் மூலம் காண்பிக்க முயற்சிக்கிறார்கள். நாம் இன்று போராடிக் கொண்டிருப்பதும் அதற்காகத்தான். இந்த நாட்டில் சினிமா ஒரு குழம்பிய நிலையில் இருக்கிறது. இன்று முதன்மையான நோக்கம் பணம் உழைப்பதாகும். வர்த்தக நோக்கத்திற்காக ஹிந்தி வீடியோ படங்களை பச்சையாகப் பிரதி செய்வதால், சினிமாத் துறை சீரழிந்து போயிருப்பது மட்டுமல்லாமல், இறுதியாக அவர்கள் கலைத் திரைப்படங்களை குறை கூறவும் தொடங்கியிருக்கிறார்கள். ரசிகர்கள் எங்களுடன் இல்லை. இந்நிலை என்னைப் பாதித்தது என்றாலும் எனது படங்கள் நீண்ட நாட்களுக்கு ஓடுகின்றன. தயாரிப்பாளர்கள் இதனை நம்புவதில்லை. இருந்தாலும் வருடத்துக்கொரு படம் டைரக்ட் பண்ணியிருக்கிறேன். அதன் மூலம் ரசிகர்களை மட்டுமன்றி தயாரிப்பாளர்களையும் குறித்த ஒரு தரத்துக்குக் கொண்டுவந்திருக்கிறேன். இன்று இந்நாட்டு சினிமாவில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியிருக்கிறேன். இன்று இந்த நாடு குறைந்த செலவில் சிறிமதுர, கடபதக்கச் சாயா, பாலமயட்ட போன்ற திரைப்படங்களைத் தயாரித்து வர்த்தகப் படமொன்றை விட அதிகம் வசூல் பெற்று ஸ்திரமான நிலையொன்றை ஏற்படுத்தியிருக்கின்றது. இன்று திட்டவட்டமாகக் கூறமுடியும், நாம் திரைப்படமொன்றைத் தயாரித்தால் பொருளாதார ரீதியில் பாதுகாப்பு உண்டு என்று. எனது நோக்கம் சிறந்த சினிமா ஒன்றைக் கட்டி எழுப்பும் அதே வேளை சிறந்த சினிமாவுக்கான ஸ்திரப்பாட்டை உருவாக்குவதுமாகும். வர்த்தக சினிமாக்கள் அதிக நாள் ஓடாமல் தோல்வியைத் தழுவுவதிலிருந்து அந்த ஸ்திரப்பாடு இன்று தெளிவாகப் புலப்படுகிறது.

**கேள்வி:** எந்த அடிப்படையில் நீங்கள் சினிமாவை அணுகுகிறீர்கள்? கலை என்ற வகையிலா? அல்லது முற்றிலும் மக்களுக்கானது என்ற வகையிலா?

**பதில்:** சினிமாக் கலையை அசுத்தப்படுத்தாமல் மக்களுக்குத் தேவையான விடயங்களை மக்களிடமிருந்து எடுத்துச் சொல்வதே எனது சினிமா. இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றிக் கதைப்பதற்கு எமக்கு சுதந்திரம் இல்லை. ஒருவர் காணாமல் போய்விட்டது பற்றி படமெடுத்தால் அப்படிப் படமெடுக்கவர் காணாமல் போய்விடுவார். எனவே எஞ்சியுள்ள சமூகப் பிரச்சினைகள் பற்றியே எடுத்துச் சொல்ல முடிகிறது.

**கேள்வி:** அரசியல் படம் எடுக்கும் உங்கள் விருப்பம் பற்றி?

**பதில்:** நிறைய விருப்பம் இருக்கிறது. எனது அடுத்த தயாரிப்பு எமக்கு போராட்டம் யுத்தம் தேவையானதுதானா என்பதைப் பற்றியது. இந்தக் கால கட்டத்தின் தேவை அது.

**கேள்வி:** நீங்க முன்னுரிமை கொடுப்பது கருத்துக்கா? காட்சி அமைப்புக்கா?

சிங்களமூலம்
பாலித லக்ஸ்மண் டீ சில்வா

தமிழ்மூலம்
மகேஸ் சோமசுந்தரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பிரேமரத்தினா வுடன் பேட்டி**

**பதில்:** எமக்கு அவசியமானது கருத்துத்தான். அது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ''மங்கலதாக்க'' எட்டு வருடங்களாக உள்ளத்தில் இருந்த கருத்தாகும். கருத்தை பலமாகக் கட்டியெழுப்பிய பின்னர் பாத்திரங்களையும் காட்சிகளையும் அமைத்துக் கொள்வது இலகு.

**கேள்வி:** உளவியல் ரீதியில் படமாளிகைக்குள் ஒருவர் இருக்கக் கூடிய நேரம் 1½ – 2 மணித்தியாலம் என்பது ஏற்கப்படுகிறது. இதற்கமைய திரைப்படம் ஓடுவதற்கென நியம கால அளவு ஏதும் இல்லையா?

**பதில் :** முதன் முதலாக எம்நாட்டில் 1½ மணி நேர திரைப்படமொன்றை (பரித்யாக) நானே இயக்கினேன். அது வெற்றியளித்தது. படத்தை அடிப்படையாகக் கொண்டே டைரக்டருக்கு அப்படத்தின் நேர அளவு பற்றிய முடிவுக்கு வர முடியும். எடுத்தவுடனேயே நேரத்தை நிர்ணயிப்பது தவறு. இப்பொழுதுதான் ரசிகர்களை பொறுமையாக வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு கால அளவை. தீர்மானிக்கிறோம் ஆனால் ஆரம்பத்தில் படங்கள் 4 மணி நேரம் வரை கூட இருந்தது. இப்பொழுது இரு மணிக்குக் குறைந்த அளவிலேயே நான் படங்களை இயக்க முயற்சிக்கிறேன்.

**கேள்வி:** பல சுரங்களை சாமத்தியமாகக்கலந்து ஒரு இசை நிகழ்ச்சியை தயாரிக்கும் செய்முறையுடன் நீங்கள் திரைப்பட ஆக்கத்தை ஒப்பிடுவீர்களா.

**பதில் :** இல்லை. திரைப்படத்தில் நாடகப்பண்புகளைப்பேணுவதற்கு நான் முயற்சிக்கிறேன். நாடகத் தன்மையுள்ள சந்தர்ப்பங்களின் உருவாக்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பதைத் தவிர, படப்பிடிப்பு, எடிட்டிங், இசை அமைப்பு ஆகியவற்றை நான் சிந்திப்பதில்லை. எனக்கு தொழில் நுட்பத்திறன் அவசியமில்லை. நான் எப்பொழுதும் நடிகர்களைக் கொண்டு நாடகப் பண்பினை ஏற்படுத்த முயற்சிக்கிறேன்.

**கேள்வி:** சில நடிகர்களால் தமது பாத்திரங்களை மட்டுமே நடிக்க முடியும். வேறு சிலரால் வேறுபட்ட பாத்திரங்களில் நடிக்க முடியும். நீங்கள் உபயோகிப்பது கதைக்குப் பொருத்தமான பாத்திரங்களையா அல்லது பாத்திரத்தில் நடிக்கக் கூடிய நடிகரையா ?

**பதில் :** மனதில் இருக்கின்ற பாத்திரங்களுக்கு பொருத்தமானவர்களை உபயோகிக்கையில் அவர்களுக்கு நடிப்பதற்கென்று பெரிதாக ஒன்றும் இருப்பதில்லை. எல்லாம் இலகுவாகி விடும். நான் எதிர்பார்ப்பது அத்தகைய நடிகர்களையே. சிறு அறிவுறுத்தல்கள் கொடுப்பதுடன் டைரக்டரின் பணி முடிந்துவிடும்,

**கேள்வி:** நடிகர்கள் நடிக்க வேண்டியதை படப்பிடிப்பின் போது அந்தந்த நேரத்தில் சொல்லிக்கொடுக்கும் டைரக்டர்கள் இருக்கிறார்கள். இம்முறை தொடர்பாக உங்கள் கருதது ?

**பதில் :** எதிர்காலத்தில் நாம் இந்த முறையைத்தான் உபயோகிக்க வேண்டியிருக்கும். இப்பொழுதே எனக்குத் தோன்றுகிறது, சில நடிகர்கள் படத்தின் டைரக்சனை கட்டுப்படுத்தும் நிலையில் இருக்கிறார்கள் என்று. இது டைரக்டருக்கு தடையாக இருக்கும். நடிகர்கள் தத்தமது பாத்திரங்கள் குறித்து சுயநலமாக இருந்தால் படம் கெட்டுவிடும். இதனால் முன்னரே திரைக்கதையைச் சொல்லாமல் நடக்கவேண்டிய விடயத்தை அந்தந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொடுத்து நடிக்க வைக்க வேண்டியிருக்கிறது. இந்த சவாலை ஏற்க நான்

**மகேஸ் சோமசுந்தரம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரேமரத்தினா
வுடன்
பேட்டி

தயாராக இருக்கிறேன். ஆனால் எனது தொழில் நுட்பக் கலைஞர்கள் கதையை தெளிவக்க அறிந்திருக்க வேண்டும்.

**கேள்வி:** நெருக்கமான (Close up) காட்சி அமைப்பைப் பயன்படுத்துவதனால், நடிப்பு என்பது முகபாவனையினால் எண்ணங்களை வெளிப்படுத்துதல் மட்டுமே எனும் கருத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா ?

**பதில் :** இது இப்பொழுதுள்ள மிகவும் புதியமுறை. புதிதாக வருகின்ற ஆங்கிலப் படங்கள் நினைக்க முடியாத அளவு குளோஸ் அப் காட்சித் தொகுதியாக அமைக்கப்படுகிறது. அதில் எடிட்டிங் விதி என்று இல்லை. அந்தப் படங்களைப் பார்க்கும் போது நாமும் அப்படிச் செய்யக்கூடாது என்று தோன்றுகிறது.

**கேள்வி:** இதன் கருத்து எப்பொழுதும் ரசிகர்களிடம் நேரடியாகவே கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்பதா ?

**பதில் :** நேரடியாகச் சொல்ல வேண்டுமென்பதில்லை. குளோஸ் அப்பில் பார்க்கும் போது ரசிகன் காட்சியுடன் நெருக்கமாக ஈடுபட்டிருக்க முடிகிறது.

**கேள்வி:** இவ்வாறு எல்லாவற்றையும் காட்டுவதன் மூலம் ஆர்வத்தை (Suspens) வைத்துக்கொள்ள முடியுமா ?

**பதில் :** எல்லாவற்றையும் கட்டுவது என்று கூறுவது கடினம். எல்லாம் குளோஸ் அப்பில் மிகவும் துல்லியமாகத் தோன்றுகிறது. கை அசைந்தாலும், கண் சிமிட்டினாலும் தெரிகிறது. இவை அனைத்தும் ரசிகருடைய ரசனையைப் பாதிக்கிறது. நாம் வாழுகின்ற கால கட்டத்தில் இது சரியென்றுதான் நான் நினைக்கிறேன். ஆரம்ப காலத்தில் யாவும் எமக்கு தூரக் காட்சியாகவே காட்டப்பட்டது. இன்று ஓரளவு சமீபித்திருக்கிறது. இது போதாதென நினைக்கிறேன். இனிவரும் படங்களில் இன்னும் நெருங்குவதற்கு நான் முயற்சிக்கிறேன்.

**கேள்வி:** ஒரு கலைப் படைப்பு எல்லாக் காலத்துக்கும், எல்லாத் தேசத்துக்கும் ஏற்புடையது எனும் கருத்தை ஏற்கிறீர்களா?

**பதில் :** நான் அதை நம்புகிறேன். பழையதாக இருந்தாலும் ஒரு கலையாக்கத்தை இன்றும் எம்மால் ரசிக்க முடிகிறது.

**கேள்வி:** உங்கள் கருத்துப்படி எழிய கதைதான் முக்கியமானது. இதன் நோக்கம் ஜனரஞ்சக சினிமாவில் நிலைத்து நிற்க நிற்க வேண்டும் என்பதா ?

**பதில் :** எமது நாட்டில் படித்தவர்கள் எத்தனை பேர் சினிமாவில் ஆர்வம் காட்டுகிறார்கள் ? படித்த சினிமா ரசிகர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு, இங்கு அக்கிராகுருசோவா, மிருநாள்சன், அடூர் கோபாலகிருஸ்ணன் போன்றோர் படங்களில் ஆர்வம் காட்டுபவர்கள் குறைவு. அப்படி இருந்தால் சிறந்த படங்கள் இங்கு ஓட வேண்டும். நிலைமை அவ்வாறு இல்லை. இந்த நிலையில்தான் நான் பயணத்தைத் தொடர்கிறேன்.

**கேள்வி:** உங்கள் சினிமா பாணியை நோக்கும் போது அதிகளவில் வசனங்களை உபயோகிப்பது போல் தெரிகிறது. சினிமா மொழியை பயன்படுத்துவது குறைவு. இது எமது மரபு ரீதியான பண்பா அல்லது வேறு காரணமா ?

**பதில் :** அது எனது பாணியாக இருக்க வேண்டும். எனது படங்கள் ஒவ்வொன்றிலும் சிறிய சிறிய வேறுபாடுகள் இருந்தன. 'மங்கல தாக்க' வில் வசனங்கள் குறைவு. ஆனால் 'பால மயட்ட' புத்தகம் என்பதால் வசனங்கள் அதிகம்.

நன்றி

சினெசின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நவீன சிறு கவிதையும் – பிரபல எழுத்தாளரும்

''தி. ஜானகிராமன் சுந்தர ராமசாமி, த. ஜெயகாந்தன், ராஜநாயாணன் போன்றோர் நவீன புனைகதை இலக்கியத்துக்கு செய்த பங்களிப்பை விட கல்கி, அகிலன், நா. பார்த்தசாரதி போன்றோர் செய்த பங்களிப்பு காத்திரமானது மட்டுமல்ல வரலாற்றுப் பதிவும் கொண்டது என்பதை புனைகதை வாசகர்கள் நன்கறிவர்''

இது பிரபல பல எழுத்தாளர் என்று தன்மை சொல்லிக் கொள்கிற தன்னுடைய எழுத்துக்களுக்கு பதிவுகளை தேடிக் கொண்டிருக்கிற தமிழ்மணி ஒருவர் தமது சிறுகதை(?) தொகுப்புக்கு தானே எழுதிய முன்னுரையில் ஒரு பகுதி.

எழுத்தாளர் முன்னே கூறியவிடயத்தை வாசகர்கள் நன்கறிவார்களோ இல்லையே இந்த எழுத்தாளர்க்கு சிறுகதை இலக்கியத்திள்ள ஆழம் ஆளுமை பற்றியும் சிறுகதை வாசகர் பற்றிய இவரது மட்டமான கணிப்பையும் அறிய இது போதுமல்லவா

## உரை...உரை!உரை?

''நான் இன்று விமர்சன உரையாற்றப் போவதில்லை நயவுரைதான் ஆற்றப் போகிறேன்'' என்று அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற நாவல் வெளியீட்டு விழாவொன்றிலே கிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவர் அழுத்தமாக கூறி விட்டு தனது உரையை ஆரம்பித்தார்.

ஒரு நாவலுக்கான நயவுரை அந்த நாவலில் நயந்தவற்றை கூறுவது என்பதாகவே அமையும். ஆனால் அந்த விரிவுரையாளரோ நாவலைப் பற்றி எதுவுமே கூறாமல் நாவலாசிரியர் நாவலுக்கு எடுத்துக் கொண்ட களத்தில் தனது பழைய நினைவுகளை மீட்டதோடு உரையை முடித்துக்கொண்டார். இது எந்த வகையில் நாவல் பற்றிய நயவுரையாக அமையும். ரசிகர்களுக்கு இது நட்டவுரையாகவே அமைந்தது.

இந்த விரிவுரையாளர் ஏற்கனவே சஞ்சிகைகளை விமர்சிக்க வந்து சங்கடத்தில் மாட்டிக் கொண்டவர். இப்படிப்பட்டவர்கள் கட்டாயம் உரையாற்ற வேண்டுமாக இருந்தால் ஏற்பாட்டாளர்களிடம் கூறி தங்களுடைய பெயரின் முன்னால் தனியே உரை என்று மட்டும் போடச் சொல்லி கேட்டுக் கொள்ளலாம் அல்லவா! ரசிகர்கள் என்ன உரை என்று தீர்மானித்துக் கொள்ளட்டும்.

## நாடறிந்த எழுந்தாளரும் நவீன இலக்கியமும்

இன்று எல்லாவகை இலக்கியமும் நவீன வடிவம் பெற்றுள்ளன. அந்நிலையிலிருந்து மேலும் புதிய நல்ல ஆரோக்கியமான மாற்றங்களைத் தேடி நிற்கிறது. இன்றைய இலக்கியவாதிகள் பலரும் இதையே விரும்புகின்றனர். ஆனால் நான் நாடறிந்த எழுத்தாளர் என்று சொல்லிக் கொள்கின்ற மொழி மணிக்கு நவின இலக்கியத்தின் மீது வெறுப்பு. காரணம் நவீன இலக்கியத்தை அவரால் புரிந்து கொள்ள முடியாமைதான். நவீன ஓவியங்கள் பெறும் கிறுக்கல், நவீன சிறுகதைகள் சிறுகதைகளேயல்ல என்பது இவர் கருத்து. அண்மையிலும் ஒரு நவீன நாடகம் ஒன்றுக்கு மத்தியஸ்தம் வகித்த பின்னர் நாடகமே விளங்கவில்லை என்றாராம். அது நவீன மோடி வகை நாடகம். பாவம் இவர் என்ன செய்வார்?

சுந்தர்

**மை பார்த்தல் ●**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அது ஆடு இது மாடு

அண்மையில் ஒரு கூட்டத்தில் சாருமதி, உமா வரதராஜ னின் கதைகளைவிட செ. குணரத்தினத்தின் கதைகள் சிறந்தவை என்று குறிப்பிட்டார். சிறுகதை என்ற அம்சத் தைப் பொறுத்தல்ல உள்ளடக்கத்தையிட்டே தான் இவ் வாறு கூறுவதாக அவர் சொன்னார்: உமா வரதராஜனின் சிறுகதைகள் கூறும் கருத்துக்களைவிட உயர்வான கருத் துக்கள் செ. குவின் கதைகளில் மட்டுமா இருக்கின்றன? மித்திரன் வாரமலர், கல்கண்டு என்பவற்றிலெல்லாம் எவ் வளவு உயர்வான பொன்மொழிகள் வருகின்றன. இதை விட, 'அறிஞர்கள் கூறும் அறிவுரைகள்' 'நூறு பொன் மொழிகள்' என்றெல்லாம் நிறைய நூல்கள் வந்துள்ளன. இவற்றிலெல்லாம் கூட சாருமதி எதிர்பார்க்கும் சமூகப் பெறுமானமுள்ள நல்ல உயர்வான கருத்துக்கள் ஏராளம் உண்டு. அவற்றையெல்லாம் சிறந்த சிறுகதைகள் என்று சொல்லுவதா?

சிறுகதை முதலில் சிறுகதையாக இருக்க வேண்டும். பிறகுதான் நல்ல சிறுகதை கூடாத சிறுகதை என்பதெல்லாம். சிறுகதையை சிறுகதையோடுதான் ஒப்பிட வேண்டும். ஆட்டையும் மாட்டையும் குழப்பத் தேவை யில்லை. முதலில் ஆடா, மாடா என்று பிரித்தறிய வேண் டும். செ.குவின் கதைகளை மோசமாகக் காட்ட வேண்டும் என்பதல்ல இதை எழுதுவதன் நோக்கம். உமா வரதராஜ னின் கலைத்தரமான சிறுகதைகளை செ.குவின் கதைகளை விடக் கீழாகக் காணும் சாருமதியின் பிழையான பார்வை யையே சுட்ட வருகிறேன்.

உள்ளடக்கத்தில் அல்ல அது வெளிப்பாடுகாணும் முறை யிலேயே கலையம்சம் உள்ளது என்பதை அறியாதவர் அல்ல சாருமதி. இருந்தும் அவர் உள்ளடக்கத்துக்கு கொடுக்கும் அளவுக்கதிகமான முக்கியத்துவம் கலையம்சத்தைப் புறக் கணிக்குமளவிற்கு அவரை தள்ளி விடுகிறது. அதன் விளைவே உமா வரதராஜனின் கதைகளைவிட செ. குவின் கதைகள் சிறந்ததாகத் தெரிவது.

— ஆதித்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*RAMAKRISHNA COMMUNICATION CENTRE*

*INTERNATIONAL QUICK COMMUNICATION*

*SERVICE IN BATTICALOA.*

**FAX**

**IDD**

**LOCAL CALLS**

**PHOTO COPY SERVICE**

**CONTACT:**

# RAMAKRISHNA COMMUNICATION CENTRE

**176/1, TRINCO ROAD, BATTICALOA.**

☎ **065-2326, 2555.**

FAX No. **094652326.**

SPARE PARTS

FOR YOUR TRACTORS

**CONTACT:**

# SRI RAM MOTOR STORES

**74, TRINCO ROAD, BATTICALOA.**

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபத்தியார் அச்சகத்தில் அச்சிட்டு மட்டக்களப்பு செபத்தியார் வீதி 22ம் இலக்கத்திலுள்ள படி ஆசிரியர் குழுவினரால் 3 – 10 – 93 ல் வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்